**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 245/2014** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | இளங்கோ | **வயது** | : | 56 |
| **த.பெ** | : | நமச்சிவாயம் | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | ஆத்துரை | **தொழில்** | : | விவசாயம் |

**11.02.2026 – வா.சா.1 குறுக்கு விசாரணை**

1)இந்த வழக்கில் நான் 5 ம் வாதி என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் என்ன என்றால் தெரியாது. பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது. சக்குபந்தி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தேவிகாபுரத்திலிருந்து அவலூர்பேட்டை செல்லும் சாலையில் மேற்கு பக்கத்தில் பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் அசல் வழக்கு எண் 209/2016 என்ற வழக்கு அவர்களின் வீட்டிற்காக உரிமைகோரி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் சர்வே நெம்பர் 308/9 மற்றும் 135/2 ஆகிய சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். முனுசாமி அவர்கள் அவரின் மனைவி பட்டம்மாளுக்கு மேற்படி சர்வே நெம்பர் 308/9 மற்றும் 135/2 சொத்துக்களை அவர் பேரில் உள்ள பட்டாவை பட்டம்மாளுக்கு பத்திரம் மூலம் எழுதிவைத்துள்ளார் என்றால் தெரியாது.

2)முனுசாமிக்கு வழங்கப்பட்ட பட்டா நிலத்தில் ஒருபகுதியில் வீடும், ஒருபகுதியில் கடையும் கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீட்டிற்கு மேற்கில் செப்டிக்டேங்க் கட்டியுள்ளார்கள் என்றால் நாங்கள் தடை செய்த பிறகு அவர்கள் கட்டினார்கள், அந்த வழியில் தான் மக்கள் போய்கொண்டு வந்துகொண்டு இருந்தார்கள். பிரதிவாதிகள் அவர்களின் பட்டா நிலத்தில் செப்டிக்டேங்க் கட்டுவதற்கு உரிமை உள்ளது என்றால் பிரதிவாதிகள் புறம்போக்கு இடத்தில் தான் செப்டிக்டேங்க் கட்டியுள்ளார்கள் அதற்கு தான் தடை கோரியுள்ளோம். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்க மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் திரு.நாகராஜன் அவர்கள் ஆணையராக நியமிக்கபட்டார் ஆனால் அவரை அழைத்து மேற்படி பிரச்சனைக்குரிய இடத்தை புறம்போக்கு இடம் என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது.

3)2014 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, 2022 வரை வழக்கறிஞர் ஆணையரை அழைத்துசென்று தாவாஇடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய முயற்சி எதுவும்

நாங்கள் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வீடு, கடை கட்டிய இடம் போக அவர்கள் மீதமுள்ள பட்டா நிலத்தில் செப்டிங்டேங்கை கட்டியுள்ளார்கள் அரசு புறம்போக்கு இடத்தில் கட்டவில்லைஎ ன்றால் சரியல்ல. உண்மையிலேயே பிரதிவாதிகள் அரசு புறம்போக்கு இடத்தில் செப்டிக்டேங்கை கட்டியிருந்தால் நாங்கள் வழக்கறிஞர் ஆணையரை அழைத்துசென்று வழக்கறிஞர் ஆணையரை அழைதது சென்று அளவீடு செய்ய முயற்சி செய்திருப்போம் என்றால் சரியல்ல. பட்டம்மாள் தாக்கல செய்த அசல் வழக்கு எண் 209/2014 இ.ம எண் 497/2014 நீதிமன்ற ஆணையர் அவரின் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார், நீதிமன்ற ஆணையர் பிரச்சனைக்குரிய இடத்தை அளக்கும்போது நானும், மற்ற வாதிகளும், அப்போதிருந்த ஊராட்சி மன்ற தலைவர் சுவாமிநாதன் அளக்கும் இடத்தில் இருந்தார் என்றால் சரிதான்.

4)நீதிமன்ற ஆணையர் மேற்படி வழக்கில் சரியாகத்தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார், அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றால் எதிர்ப்பு தெரிவித்து ஆகையால் தான் மனு தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ-6 ஆவணத்தில் 06.06.2014 ல் ஆத்துரை ஊராட்சி தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்திருக்கிறோம். மேற்படி தீர்மானத்தில் யார் ஆக்கிரமிப்பு செய்தார்கள், எந்த சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சர்வே நெம்பரோ, பெயரோ குறிப்பிடபடவில்லை. வா.சா-ஆ.6 ஆவணம் முறைப்படி மனு செய்து ஊராட்சி மன்றத்திலிருந்து பெற்றேனா என்றால் எனக்கு தெரியாது. அதேபோன்று 02.10.2015 ல் ஆத்துரை ஊராட்சி தீர்மானத்தை வா.சா.ஆ-7 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம், அதில் 29 வது தீர்மானமாக ஆக்கிரமிப்பு அகற்றவேண்டும் என்று தான் உள்ளது, யார் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள், எந்த சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடபடவில்லை என்றால் குறிப்பிடபடவில்லை.

5)வா.சா.ஆ.7 தீர்மானத்தின் நகலை சுவாமிநாதன் கொடுத்துள்ளார் நாங்கள் முறைப்படி வாங்கிய ஆவணம் கிடையாது என்றால் சரிதான். பட்டம்மாள் வீடு, கடைக்கு தெற்கில் 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் அவர்களின் வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு முன்பு அரசுக்கு சொந்தமான 2 புளியமரங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த 2 புளியமரங்கள் முன்பு வரை தான் காந்திநகர் செல்லும் ரோடு உள்ளது என்றால் இல்லை. அந்த புளியமரங்களிலிருந்து செப்டிங்டேங்க் மற்றும் குப்பை கொட்டும் இடத்தில் சாலை உள்ளதா என்றால் ஆமாம், செப்டிங்டேங்க் முன்புவரை தார்சாலை இருக்கிறது, பிரதிவாதிகள் செப்டிங்டேங்க் கட்டியதால் தார்சாலை அப்படியே நிற்கிறது.

6)மேற்படி செப்டிங்டேங்க் கட்டிய இடம் பட்டா இடம் என்பதால் தான் அங்கு தார்சாலை அமைக்கபடவில்லை என்றால் பட்டா இடம் கிடையாது, அது நீர்பிடிப்பு கால்வாய், அதில் தான் செப்டிங்டேங்க்க ட்டியுள்ளார்கள். மேற்படி நீர்பிடிப்பு கால்வாய் சர்வே எண்

மற்றும் பரப்பளவு என்ன என்றால் எனக்கு ஞாபகத்திற்கு வரவில்லை. பட்டம்மாளுக்கு 3 பெண் பிள்ளைகள் தான் ஆண்பிள்ளைகள் இல்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு காந்திநகரை அடுத்து நிலம் உள்ளது என்றால் சரிதான். பட்டம்மாளுக்கு ஆண் வாரிசு இல்லாததால், அவரின் நிலத்தில் ரோடு போகவேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

7)நான் கூறுவது தவறு உண்மையிலேயே அரசு புறம்போக்கு இடத்தில் செப்டிக்டேங்க் கட்டப்பட்டிருந்தால் வழக்கறிஞர் ஆணையர் அவர்களை அழைத்துசென்று மேற்படி இடத்தை அளக்க முயற்சி எடுத்திருப்போம் என்றால் சரியல்ல. சர்வே நெம்பர் 308/9, மற்றும் 135/2 சொத்துக்களை தடை செய்வதற்கு எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.02.12 13:00:11 +0530

District Munsif,
Polur.